ஐக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 05 திங்கட்கிழமை (21-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 269

# அரசின் தீர்வு யோசனைகளுக்கு தெற்கில் எதிர்ப்பு வலுக்கின்றது!

## சிங்கள இனவாதிகளின் கை ஓங்குகின்றது

கொழும்பு, ஓகஸ்ட் 21

இனப்பிரச்சினைக்கு ஸ்ரீலங்கா அரசு முன் வைத்திருக்கும் தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு தெற்கில் எதிர்ப்பு வலுத்து வருகின்றது.

நேற்று கொழும்பில் வெளியான வார இதழ்கள் தெரிவித்துள்ள கருத்துகளின் படி, தீர்வுத் திட்டத்துக்கு எதிராக சிங்கள இனவாதிகளின் கண்டனக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது.

அரசின் தீர்வுத் திட்டம் தொடர்பாக "Research International Ltd.," என்ற அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றை "த சண்டே ரைம்ஸ்" பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச சந்திரிகா விதிக்கும் நிபந்தனைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பது குறித்து ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சாடைமாடையாகக் குறிப்பிட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் மோதல்களை நிறுத்தி, பகைமைப் போக்கைக் கைவிட திட்டவட்டமாக ஒப்புக்கொள்வார்களேயானால் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் சனி இரவு தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 21

மட்டக்களப்பு நகரில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் ஒன்றின் மீதும், சிறைச்சாலை ஒன்றின் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு ஆரம்பமான தாக்குதல் நேற்று அதிகாலை 5 மணி வரை தொடர்ந்தது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சமர் இடம் பெற்றதாகவும்—

தாக்குதல் நடந்த பகுதிக்கு மேலதிக இராணுவத்தினரும், பொலீஸாரும் அனுப்பப்பட்டுள்ளதாகவும்—

பாதுகாப்பு அமைச்சு செய்திகளை மேற்கோள்காட்டி அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் குறித்து சரியான விவரங்கள் கிடைக்கவில்லை என "புலிகளின் குரல்" அறிவித்தது. [உ-3]

## மருந்துகளுடன் 'ஹபரண' வெள்ளியன்று வரும்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். ஆஸ்பத்திரி உட்பட ஏனைய வடபகுதி ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான ஒரு தொகை மருந்து வகைகளுடன் 'ஹபரண' கப்பல் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள இக்கப்பல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இங்கு தங்கிநிற்கும்.

அரசசார்பற்ற அமைப்புக்களுக்கும் ஒரு தொகுதி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு ஆளும் கட்சிக்குள்ளும் எதிர்ப்பு தீவிரம்!

கொழும்பு, ஓக. 21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்துள்ள யோசனைகளுக்கு ஆளும் கட்சிக்குள் இருந்தே கடும் எதிர்ப்பு வந்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

"அரசின் திட்டத்துக்கு ரத்னசிறி எதிர்ப்பு" என்ற செய்தி "த சண்டே லீடர்" பத்திரிகையின் முன்பக்க முக்கிய செய்தியாக வெளியாகியுள்ளது.

தீர்வு யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது—

ஆளும் பொ.ஐ.முன்னணியில் இடம்பெற்றுள்ள பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகரும், முன்னணித் தலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எந்தத் தடைவரினும் தீர்வுத்திட்டத்தை அரசு நிறைவேற்றியே தீரும்!

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஓக. 21

"எத்தகைய தடைகள் குறுக்கிட்டாலும் இந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை அமுல் செய்தே தீருவது என அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது"

— இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

"வெண்தாமரை" இயக்கம் குறித்து ஆசிரியர்களுக்கு விளக்கும் நோக்குடன் கொழும்பு நவரங்க கலா மண்டபத்தில் நேற்று நடந்த கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி என்ற முறையில் மட்டுமல்லாமல் ஒரு சாதாரண பிரசை என்ற வகையிலும் இந்த நாடு பிளவுபடுவதை நான் முழுமூச்சுடன் எதிர்க்கிறேன்.

அதேசமயத்தில் யதார்த்த நிலையையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த 13 ஆண்டுகளாக வடக்கிலும், கிழக்கிலும் சில பிரதேசங்களில் புறம்பான நிர்வாகம் இடம் பெற்று வருகிறது.

இந்த நிலைமையைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படை உயர்மட்டத்தில் முரண்பாடு: யாழ். மீதான நடவடிக்கை தாமதம்?

கொழும்பு, ஓக. 21

இராணுவ உயர்பீடத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள் முரண்பாடுகள் காரணமாக—

யாழ். குடாநாடு மீது உடனடியாக பாரிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிப்பது சாத்தியப்படாமல் போயிருப்பதாக கொழும்பில் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

யாழ். குடாநாடு மீது ஜூலை மாதத்தில் நடத்தப்பட்ட "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை படை உயர்மட்டத்தில் பெரும் முறுகல் நிலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்நடவடிக்கையின் தோல்வி—

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவுக்கும், அந்நடவடிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சகல வகை உரங்களும் எடுத்து வருவதற்கு தடை!

### கடந்த வியாழன் முதல் அரசு விதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். மாவட்டத்துக்கு உரம் எடுத்து வருவதற்கு அரசு முற்றாகத் தடை விதித்திருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை முதல் இந்தத் தடை நடைமுறைக்கு வந்ததாக அரச தமக்கு தெரிவித்துள்ளது என்று யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

அமோனியம் கலந்த உரம் எடுத்துவர கடந்த மாதம் அனுமதி வழங்கிய அரசு, பின்னர் அதை இங்கு எடுத்துவர தடை விதித்தது.

மீண்டும் ஆயிரத்து500மெற்றிக் தொன் ரி.டி.எம். ரக உரத்தை எடுத்துவர கடந்த வாரம் அரசு அனுமதி வழங்கியது.

ஆனால் திடீரென கடந்த வியாழன் முதல் சகலவித உரங்களை எடுத்து வருவதற்கும் அரசு தடை விதித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கமும்
சென்றலைற்ஸ்
விளையாட்டுக் கழகமும்
இணைந்து நடத்தும்

## யாழ். மத்திய கல்லூரி
# நிறுவுநர் நாள்

சுற்றுக் கேடயத்திற்கான
மட்டுப்படுத்தப்பட்ட 6 - 6

## துடுப்பாட்டப் போட்டிகள்

1995 செப்ரெம்பர் 2 - 3 திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரி
மைதானத்தில்
மு. ப 8-30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்

விண்ணப்பங்கள்: **25-08-95**
பி. ப. 4-30 வரை ஏற்றுக் கொள்ளப்படும்
அணி ஒழுங்குத் தெரிவு: **26-08-95**
பி. ப. 4-30 மணிக்கு
யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்

செயலாளர்,
சென்றலைற்ஸ் விளையாட்டுக்
கழகம்
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கா. மாணிக்கவாசகர், செயலாளர், யா. ம. க. ப. மா. ச
கே. உருத்திரசுந்தரம் செயலாளர். செ. வி. க.

(சி/2083)

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி பத்மநாதன் பாலயோகினி

அவனியில் பிறப்பு: 02 - 12 - 1955

## செல்வி மலர்விழி பத்மநாதன்

அவனியில் பிறப்பு: 17 - 12 - 1982
அரக்கன் அழிப்பு: 09 - 07 - 1995

திதி: 22 - 08 - 1995

பாரினில் அன்புடனும், பண்புடனும்
வலம் வந்த எனது அருமைத் துணைவியே!
எமக்கு வளமான வாழ்வளித்து
ஒளியூட்டி இதம் தந்த அன்னையே!
இவ்வுலகை விட்டுப் பிரியும் போது
உதவிக்கு மகளையும் அழைத்துச் சென்றாயே
எம்முயிர் உள்ளவரை உங்கள் நினைவு
எம் மனத்திரையில் நிலைத்த ஓவியமே!
மீண்டும் வரும் பிறவியிலும் உங்களுடன்
உறவாட வேண்டுகிறோம் ஆண்டவனை.

பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்
இ. பத்மநாதன்,
ப. பிரகலாதன்,
க. கணபதிப்பிள்ளை.
[கந்தரோடை]

C/o. த. சிவலோகநாதன்
பலாலி வீதி, திருநெல்வேலி.

[38185]

## புலிகளின் குரல் வானொலியில்

21 - 08 - 1995
**திங்கள் இரவு**

★ 8-02—தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — சமகாலப் பார்வை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — நிகழ்ச்சியில் மன்னார் நாச்சிக்குடாவைச் சேர்ந்த நாட்டுக்கூத்துக் கலைஞர் திரு சந்தியாப்பிள்ளை — பத்திநாதருடனான செவ்வி

22 - 08 - 1995
**செவ்வாய் காலை**

★ 7-02— மாவீரர் வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

**திங்கள் மாலை**

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5-30 — மாணவர் பக்கம் — நிகழ்ச்சியில் காரைநகர் தம்பிரான் நடேஸ்வரா கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'காத்தவராஜன் கூத்து'
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 —என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 —நேயர் நெஞ்சம்

## நல்லூர் ஆலய சூழலில் இன்று நடப்பவை

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 21ஆம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றிலில் —
மாலை 6மணி — 7மணி வரை ஜெயந்தி செல்லையா பாட்டு.
7மணி — 8-30 மணி வரை திரு என். கே. கணேசன் குழுவினரின் நாதஸ்வர இசை

★ நல்லை ஆதீன கலா மண்டபத்தில் —
காலை 8-30 — நண்பகல் 12மணி வரை
திருமுறை வழிபாடும், பயிற்சிநெறி வகுப்புக்களும்
பண்டிதர் மு. கந்தையா உரை— "உடலியலும், ஆலய அமைப்பும்"
சைவப்பெரியார் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் உரை — 'சமயதீட்சை'

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் —
பிற்பகல் 3 மணிக்கு சிவ மகாலிங்கத்தின் சமயப் பேருரை — 'திருமந்திரம்'

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் —
மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் "விஷ்ணு பாகவதம்" தொடர் இசைப் பேருரையில் "ஹரிசவதம்".

## தபாலக சிற்றூழியர் நியமனம்

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் நிலவி வந்த சமயாசமய சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவான 91 பேருக்கும் இம் மாத இறுதிக்குள் நியமனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (க-4)

# பொதுக் கல்வித் தேர்வுக்கு தோற்றும் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 21
தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வுக்கான அனுமதி அட்டைகளைத் தேர்வு நாடிகள் அனைவரும் நாளைய தினத்துக்கு முன் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமக்கு வழங்கப்பட்டுள்ள தேர்வு நிலையத்தில் தோற்ற இயலாது இடம்பெயர்ந்துள்ள தேர்வுநாடிகள் தாம் தோற்ற விரும்பும் நிலையம் முதலிய விவரங்களைத் தமது பாடசாலை அதிபரிடம் எழுத்து மூலம் வழங்கி நிலைய மாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

அதிபர்கள் நிலைய மாற்றத்துக்கு விண்ணப்பிக்கும் அனைத்துத் தேர்வு நாடிகளினதும் விவரங்களை நாளை மறுதினம் பூரணமாகத் தமது கோட்டக்கல்வி அலுவலர்களிடம் சமர்ப்பிக்கவேண்டும். கோட்டக்கல்வி அலுவலர் தேர்வுப் பணிமனையுடன் தொடர்புகொண்டு நிலைய மாற்றத்துக்கான நடவடிக்கை எடுப்பார்.

நிலைய மாற்றத்துக்கு விண்ணப்பித்த தேர்வு நாடிகளுக்கான புதிய அனுமதி அட்டைகள் 24 ஆம் திகதி காலை மணிக்கு நல்லூர் ஸ்தானிய ம. வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படும். பழைய அனுமதி அட்டையைச் சமர்பித்துப் புதியவற்றைப் பெற வேண்டும்.

இத் தீர்மானங்கள் நேற்று நடைபெற்ற தேர்வுச்சபைப் பொதுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகத் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ)

## ரயில் விபத்தில் 208 பேர் பலி!

பெரோசபாத், ஓக. 21
இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் உள்ள பெரோசபாத்தில் நேற்று 20 ஆம் திகதி காலை நடைபெற்ற பெரும் ரயில் விபத்து ஒன்றில் குறைந்தபட்சம் 208 பேர் இறந்துள்ளனர்; 230 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கடுகதி ரயில் ஒன்றும் மற்றொரு ரயிலும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. [உ-க]

# நன்றி நவிலலும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி இராசம்மா கார்த்திகேசு

தோற்றம்: 1913-04-24
மறைவு: 1995-07-22

எமது குடும்ப விளக்காக விளங்கிய திருமதி. இராசம்மா கார்த்திகேசு அவர்கள், 22-07-1995 இல் இறைபதம் அடைந்ததையிட்டு. எமது இல்லம் வந்து, ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (21-08-1995) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

கா. குணரத்தினம் (மகன்) (விவசாயத் திணைக்களம், திருமலை)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

151, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி/2084)

# பயிலுநர் ஆசிரியருக்கான செயலமர்வு இடை நிறுத்தம்

பருத்தித்துறை, ஓக.21

கல்வித் துணைச் சேவையால் தயாரிக்கப்பட்ட 25ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கான வருடாந்தநிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள செயலமர்வுகள், மேற்பார்வை நடவடிக்கைகள் ஆகியன மறுஅறிவித்தல் வரை இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தேசியகல்வி நிறுவன உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது தொகுதி தோறும் அமைக்கப்பட்டுள்ள தொலைக்கல்வி மத்திய நிலையங்களை கல்வி வலயங்களுடன் இணைப்பது பற்றி ஆராயப்படுகின்றது. மேலும் அழகியல், தொழில்நுட்ப பாடங்கள், விஞ்ஞானம், தமிழ், சமயம், ஆகிய பாட நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோருக்கு மாவட்ட மட்டத்தில்மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையில் தொலைக்கல்வி பாட போதனை நடத்தப்படவுள்ளது.

இதுவரை காலமும் போதனாசிரியர்களாகவும் சிரேஷ்ட போதனாசிரியர்களாகவும் இருந்தவர்களிடமும் மேலும் பங்குபற்ற விரும்புபவர்களிடமும் இருந்து விரைவில் தேசிய கல்வி நிறுவனம் விண்ணப்பங்களைக் கோர உள்ளது.

ஊழல் மோசடி நடவடிக்கையைச் சீர்செய்ய இலங்கை பூராவும் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் பொதுப் பரீட்சை நடத்தி போதனாசிரியர்களும் சிரேஷ்ட போதனாசிரியர்களும் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-118)

## தனியார் மயத்தை எதிர்த்து மலையகத்தில் போராட்டம்

### பரவலாக நடத்த முடிவு

கொழும்பு, ஓக.21

தோட்டத்துறையை முழுமையாகத் தனியார் மயப்படுத்துவது என அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தைஆட்சேபித்து பாதயாத்திரை, சத்தியாக்கிரகப் போராட்டங்களை மலையகம் எங்கும் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஹட்டன், கண்டி, பதுளை இரத்தினபுரி ஆகிய நகரங்களில் எதிர்வரும் 27 ஆம் திகதி சத்தியாக்கிரகம், பாதயாத்திரை என்பவற்றை நடத்த மலையகத்தில் உள்ள சமூகநல அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் என்பன ஏற்பாடு செய்துள்ளன. (ஐ)

## சந்திரிகா கொடும்பாவி எரிப்பு

மதுரை, ஓக. 21

இலங்கை இராணுவம் தமிழர் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து ஜனாதிபதி சந்திரிகாவின் கொடும்பாவி மதுரையில் எரிக்கப்பட்டுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியினரே இவ்வாறு இலங்கை ஜனாதிபதியின் கொடும்பாவியை எரித்தனர்.

இதனை அடுத்து கட்சித் தொண்டர்கள் 7பேர் மதுரையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். [க-எ]

## சங்கானை ஆஸ்பத்திரி ஆனைக்கோட்டையில்

சங்கானை அரசினர் வைத்திய சாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும், பற்சிகிச்சைப் பிரிவும் இவ்வாரத்தில் இருந்து ஆனைக்கோட்டையில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் எனினும் இவ் வைத்திய சாலையின் சிலபிரிவுகள் தொடர்ந்தும் சங்கானையிலேயே இயங்குமென யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. வி. சிறீகாந்தா தெரிவித்தார். (ஓ-4)

# கொழும்பில் ராணுவத்தால் இளைஞர் யுவதிகள் கைது

கொழும்பு, ஓக. 21

கடந்த வியாழக்கிழமை கொழும்பு கொட்டாஞ்சேனை புதுச் செட்டித்தெருப் பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய இராணுவத்தினர் 20 தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் 9 இளம் பெண்கள், சிங்களத்தில் ஒரு சொல் கூடப் பேசத் தெரியாதவர்கள் என 'திவயின' என்ற சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இப் பகுதிக்குள் வெடி குண்டுகளுடன் விடுதலைப் புலிகள் நுழைந்துள்ளதாக கிடைத்த தகவலை அடுத்தே இத் தேடுதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

## வலி.மேற்குக் கிராமங்களில் ஊர்காப்புக் கழகங்கள்

வலிகாமம் மேற்கு, ஓக. 21

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஊர்காப்பு கழகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவகர் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்டு வரும் இந்த ஊர்காப்புக் கழகங்கள் கிராமத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள், வன்செயலினால் பாதிக்கப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லல், பொது இடங்களில் பதுங்குகுழி அமைத்தல், இடம் பெயரும் மக்களின் நலன்களைக் கவனித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

வட்டு. வடக்கு கிராம சேவகர் பிரிவுக்கான ஊர்காப்பு கழகம் கடந்த ஞாயிறு பிற்பகல் 5மணியளவில் கலைநகர் நேருஜீ ச. ச. நிலைய முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் அமைக்கப்பட்டது. [ஐ-165]

## வண்டு, புழு காணப்பட்ட கோதுமை மா அழிப்பு

யாழ். குடாநாட்டில் தற்போது விற்பனவு செய்யப்பட்டுவரும் கோதுமை மாவில் புழுக்களும், சிறிய வண்டுகளும் கணிசமான எண்ணிக்கையில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரிலும், வடமராட்சியிலும் தூய்மையற்ற கோதுமை மா விற்பனை, வெதுப்பக நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்டு மாவும் வெதுப்பித் தயாரிப்புக்களும் தமிழீழ சுகாதார சேவை உணவு மருந்து பரிசோதகர்களால் அழிக்கப்பட்டுள்ளன.

வெதுப்பகங்கள், உணவகங்கள் அனைத்தும் கோதுமை மாவை அரித்த பின்னர் வெதுப்பி மற்றும் உணவுப் பண்டங்கள் தயாரிக்க வேண்டுமெனவும், பரிசோதனையின்போது புழுக்கள், வண்டுகள், பிறபொருள்கள் மனித போசனை உணவுப் பொருள்களில் காணப்படின், தயாரிப்பு அனைத்தையும் அழிப்பதோடு, வியாபார அனுமதியும் (லைசென்ஸ்) ரத்துச் செய்யப்படுமெனத் தமிழீழ சுகாதார சேவைகளின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் கோதுமை மா வாங்கும்போது இவற்றைக் கவனித்து கொள்வனவு செய்யுமாறும், மாவை அரித்த பின்னர் பாவனைக்கு எடுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வலிகாமம் பகுதியில் சிங்களக் குடியேற்றம்; இதுவே இராணுவ நடவடிக்கையின் நோக்கம்

## விடுதலைப் புலிகள் பிரமுகர் உரை

வலிகாமத்தில் அளவெட்டியில் இருந்து அராலி வரை காரையாளர்களை உள்ளடக்கியதான சிங்களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்கும் திட்டத்துடனேயே முன்னேறிப் பாய்தல் போர் நடவடிக்கை இடம்பெற்றது.

தற்போதைய சூழ்நிலையில் இந்துக் கோயில்களும் நிறுவனங்களும் ஆற்ற வேண்டிய பணிகள் பங்களிப்புக்கள் குறித்த கலந்துரையாடலில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமார் இவ்வாறு கூறினார்.

இந்து சமயப் பேரவையின் சார்பில் நல்லை ஆதீனத்தில் கடந்த 12ஆம் திகதி இந்து சமயப் பேரவையின் பதில் தலைவர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இந்து ஆலயங்களின் அறங்காவலர்கள் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

திரு பாலகுமார் மேலும் பேசும்போது கூறியதாவது;

குறிப்பிட்ட பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்ததும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி சிவில் நிர்வாகத்தை அப்பகுதிகளில் நடத்துவதற்கான திட்டம் ஒன்றுடன் தயாராக இருந்தார் ஒரு ஸ்ரீலங்கா அமைச்சர்.

இரண்டு மாதங்களுக்குள் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு ஸ்ரீலங்கா அரசு தயாராகி வருகிறது.

போரில் வெல்ல வேண்டும் என்பதற்காக சிங்கள மக்கள் ஒவ்வொருவரும் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதற்காக பிக்குகளின் உதவியை ஸ்ரீலங்கா அரசு நாடியுள்ளது.

ஐயாயிரம் கோடி ரூபா ராணுவ தளபாடங்கள் பிக்குகளின் ஆசியுடன் இறக்கப்படுகின்றன. ராணுவச் சிப்பாய்களுக்கு பிரித் நோதி நூல் கட்டி விடுகிறார்கள். இவை சிங்களமக்களைப் போருக்காக நெறிப்படுத்தலே ஆகும்.

பெரியபுராணம், கந்தபுராணம் என்பன தர்மயுத்தம் பற்றி எடுத்துக் கூறுகின்றன. இன்று இங்கு நடப்பதும் தர்மயுத்தமே.பண்டைக்காலத்தில் கோயில்கள் மக்களைப் பாதுகாக்கும் இடங்களாக மட்டுமன்றி ஆயுதங்களைப் பாதுகாக்கும் இடங்களாகவும் விளங்கின.

இந்நிலையில் தர்மங்களைப் போதிக்கும் இந்துக் கோயில்கள், இந்து அமைப்புக்கள் செய்தபணி என்ன? அலைக்கழிக்கப் பட்டுவரும் மக்களுக்கு அவை செய்த தொண்டு என்ன?

இது எமக்குச் சம்பந்தமில்லாத போராட்டம் என்று கருதக் கூடாது. வரப்போகும் எதிரி ஆலயங்கள்,பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள், என்றோ அல்லது இவற்றுக்கும் இந்த போருக்கும் தொடர்பில்லை என்றோ பார்க்கப் போவதில்லை. ஒட்டு மொத்தமாக தமிழினத்தை அழிப்பதே அவனது நோக்கம்.

—இவ்வாறு அவர் கூறினார். (க-111)

## நடேஸ்வரா மாணவர்க்கு

தற்போது க. பொ. த (சா. த) வகுப்புப் படிக்கும் மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை தமிழீழ பொதுக் கல்வித் தேர்வுக்குரிய நுழைவு அட்டைகளை காலை 10மணிக்கு யூனியன் கல்லூரியில் தவறாது பெற்றுக்கொள்ளும்படி அதிபர் திரு. க. தனபாலசிங்கம் கேட்டுக்கொள்ளுகிறார். [க]

## உப்பு விளைச்சல்

வல்லை கடலேரியில் இம்முறை உப்பு அமோக விளைச்சல் கண்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்த உப்பை சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. [க-15]



உ
சிவமயம்

"கோடி அண்டங்கள் ஒளிதரும் வேலவா நாடி அலைகின்றோம் நல்லருள் வேண்டி நாம் ஓடி வந்தருள்வாய் உயர் தங்க ரதத்தினிலே"

தரமான தங்க நகைகளை
அசல் 22 கரட்டில் செய்து பெற்றுக் கொள்ள

★ கனகசபை தர்மகுலசிங்கம் ★

539, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(38137)

''பழமுதிர்சோலை''
காரைநகர்.

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைக்குரிய சோக்கேஸ் [10x8], ஒடுகள், குசன்செற்றி, பின்னல்செற்றி, ஓவன், ட்றெசிங்ரேபிள், சாப்பாட்டு மேசைகள், கதிரைகள் மற்றும் வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. குறிஞ்சி மருத்தகம் [அருகில்], பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி (38091)

120 அம்பியர் கொண்ட புதிய லொறி மற்றறி விற்பனைக்குண்டு. பழைய இல. 203, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (38123)

### மலிவு விற்பனை

சமய நூல்கள், பக்தி இலக்கியங்கள், இலங்கை – இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் பாடசாலை உபகரணங்கள் யாவும் விற்பனையாகின்றன. ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். [38077]

### ஓடுகள் விற்பனைக்கு

தட்டு ஓடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம. பொன்னையா பிரதான வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பு. (38102)

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1967)

### வெளிவந்துவிட்டது

கூத்தப்பிரான் வெளியீடு: க. பொ. த. [உயர்தரம்] புதிய பாடத்திட்டம் சங்க நூற்றிரட்டு வெளிவந்துவிட்டது. (88122)

### பீலித் தகரம்

35 புதிய பீலித் தகரம் சேஜ் 28 நீளம் 10 அடி அகலம் 33அங்குலம் விற்பனைக்குண்டு. சி. ஞானசுந்தரம், உச்சி ஒடை மானிப்பாய். (38116)

### யாழ் கோட்டை

யாழ்ப்பாணக் கோட்டையின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் விளக்கும் வரலாற்று ஆவணம். களம் பல கண்ட யாழ் கோட்டை, அறிமுக விலை ரூபா 60/–. நல்லூர் ஆலய வீதியில் உள்ள பூபால சிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த்தாய் புத்தகசாலைகள். (37995)

### ஆண்டு 9 கணக்கியல்

கனிஷ்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான கணக்கியல் பயிற்சிப் புத்தகம் எல்லா புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. G.C.E. (O/L) மாணவர்களுக்கான வர்த்தகம் வினாவிடைத் தொகுப்பு புத்தகமும் மீண்டும் வெளிவந்துவிட்டது. ஆக்கம் த. தர்மராஜன். [38100]

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிவிகாவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, கிராண்வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1975]

# தேவை

அஸ்பெஸ்டஸ் தகடுகள், கூரைச் ''சீலிங்'' தகடுகள், தண்ணீர்த் தாங்கிகள் பாவித்தவை, புதியவை தேவை. எது இருப்பினும், விபரங்கள் விலைகளுடன் உடன் தொடர்பு கொள்ளவும்:

**புறோமோட்டோர்ஸ் என்ஜினியேர்ஸ்,**
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 08 — 12 — 1973



ஆண்டவன் அடியில்: 27 — 08 — 1993

செல்வன்

## திசருபன் செல்லத்துரை

**திதி: 21 — 08 — 1995 [ஏகாதசி]**

''திசருபா நீ மறைந்து ஈராண்டு மாயினதோ
திசை எட்டும் தொழுதழுது நின் உருவைத் –
தேடுகின்றோம்
ஏக புத்திரனாய் எமது கலி தீர்த்தவனே
உன் இறப்பின் மர்மத்தை இனியேனும் -
உரையாயோ?

உனது பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா,
அக்காமார், அத்தான்மார்,
மருமக்கள், அரிச்சுனன் மாமா.

முகவரி: ''ரஞ்சனா கபே''
85/2 பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (38120)

# ஈராண்டு ஆனதோ?



அமரர்

## சுந்தரம்பிள்ளை சிவறாஜா

(வடமாகாண கூட்டுறவுப் பரிசோதகர்)

**திதி: 21 – 08 – 1995**

ஆருயிர் துணைவரே, பாசமிகு அப்பாவே!
கனவு போன்றதக்காட்சி,
உங்கள் கருணைமுகமும், எடுப்பான தோற்றமும்,
நாம் பார்த்து ஆண்டிரண்டானதே
ஈடுஇணையற்ற சமூக சேவைத் தொண்டனே,
வெறிச்சோடிக் கிடக்குதெங்கள்,
இல்லமும், இதயங்களும் விழிசிந்தும் கண்ணீரில்
நீங்கள்தான் இருக்கின்றீர்கள்
அறிவுக்கடல் ஆற்றல் மிகுந்தவரே
நீங்கள் ஆண்ட இல்லம்
நினைவு கூருகிறதே இன்று அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
ஸ்ரீ சலட்டிப்புலம் ஞான வைரவரை வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
— குடும்பத்தினர்

''சிவபதி''
14/1, விதானை வீதி, சுண்டிக்குளி
யாழ்ப்பாணம். [38134]

# கொழும்பு வர்த்தகர்கள் புலிகளுக்கு நிதி உதவியாம்

## சிங்கள நாளிதழ் செய்தி

கொழும்பு, ஓக. 21

விடுதலைப்புலிகளுக்கு நிதி மற்றும் உதவிகளை வழங்கி வருகிறார்கள் எனச் சந்தேகிக்கப்படும் கொழும்பைச் சேர்ந்த 12 வர்த்தகர்கள் தொடர்பாக புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

இந்தத் தகவல்களையடுத்து குறித்த வர்த்தகர் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என "லங்காதீப" பத்திரிகை தெரிவிக்கிறது.

ஆயுதக் கொள்வனவு மற்றும் முக்கிய தேவைகளுக்கு மாதாந்தம் இந்த வர்த்தகர்கள் விடுதலைப் புலிகளுக்கு பணம் அனுப்புவதாகவும்—

விடுதலைப் புலிகள் கேட்ட உடனே இந்த வர்த்தகர்கள் பணத்தை அனுப்பத் தயாராக உள்ளனர் எனவும்—

அவர்கள் நவீன தொலைத் தொடர்பு உபகரணங்களையும் பாக்ஸ் உபகரணங்களையும் பயன்படுத்தி வருகிறார்கள் எனவும் — அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-18)

## திருமுறை பூசையும் வழிபாடும்

யாழ்ப்பாணம், ஓக. 21

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஆதரவில் கடந்த 10ஆம் திகதி ஆடிப்பூரணைத் தினத்தன்று நல்லை ஆதீனத்தில் திருமுறைப் பூசையும், வழிபாடும், கோமாதா பூசையும் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்றன.

மகளிருக்கான

# மனைப் பொருளியலும் கைத்திறனும்

டிப்ளோமா பயிற்சி

✶ கேக் ஐஸிங் ✶ உணவு தயாரித்தல்
✶ உடைதயாரித்தல்
✶ கை வேலை ✶ பூ வேலை

- மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவச கூந்தல் அலங்காரம், இந்து கிறிஸ்தவ மணப்பெண் ஒப்பனை அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.
- பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
- பயிற்சி முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் வகுப்புகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் நடைபெறும்.

**ஆரம்பம்: 04 - 09 - 1995**

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 10 - 09 - 1995**

## ★ கலாலயா ★

தொழிற்பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
[யாழ். போதனா வைத்தியசாலையின் பின் வீதி]

[சி-2082]

'இளைய தலைமுறையின் புதிய வழிகாட்டல்'

# A\L புதிய பிரிவுகள் ஆரம்பம்

அமைதியான சூழலில் உங்களுக்காக!

தூயபிரயோக கணிதம் — திரு. சத்தியன்
பௌதீகவியல் — திரு. பாலன்
இரசாயனவியல் — திரு. A. K. மூர்த்தி

**"97" பிரிவுக்கானது**
**27-08-95** [ஞாயிறு] காலை 10-00 மணிக்கு ஆரம்பம்
(பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளவும்.)

A/L எடுத்த, பல்கலைக்கழக, வங்கியாளர்கள் அனைவருக்குமான

**3ஆம் பிரிவு**
**விசேட சிங்களம்**

**26-08-95** [சனி] காலை 9-00 மணிக்கு ஆரம்பம்

ஆசிரியர்
**திரு. E. S. பியதாஷ**

## "ஸ்ரார் சயன்ஸ் சென்ரர்"

கனகரட்ணம் சந்தி, அரியாலை

(38128)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நல்லூரில் நமது நாடு

நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்; இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரே இவ்வாறு பாடியவன் பாரதி. அதே போல, ஈழத்தமிழ் மக்களும் தாம் வாழும் நாடு தமக்கே உரியது என்பதனைச் சுதந்திரம் கைக்கு வந்து சேருவதற்கு முன்னரே உணர்ந்து கொண்டு விட்டனர்.

நமக்குச்சொந்தமான நாடு எத்தகையது என்பதனை ஒவ்வொரு பிரசையும் அறிந்திருக்க வேண்டும். அதனை சுமார் இரண்டு மணித்தியாலங்களில் நல்லூரில் பார்க்கக்கூடிய வசதியைச் செய்துள்ளனர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர்.

அரசியல் விடுதலைக்கு அடித்தளமாக விளங்குவது பொருண்மிய விடுதலை. எங்களது பொருண்மியம் மேம்பட்டிருந்தால் நாம் எமது சொந்தக் கால்களிலேயே நிற்கலாம். அவ்வாறு சொந்தக் காலில் நிற்க முடிந்தால் எம்மீது எவரும் அழுத்தம் போட முடியாது. அதன் பெறுபேறாக சுதந்திரம் விரைவில் வந்துவிடும்.

இதனை உணர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் விடுதலைக்காகப் போராடும் அதே வேளையில்—சம காலத்தில் — பொருண்மிய வளர்ச்சிக்காகவும் தீவிரமாக உழைத்து வருகிறார்கள்.

நல்லூரில் நடைபெறும் பொருண்மியக் கண்காட்சி அதனை மிகத்தெளிவாகப் பிரதிபலிக்கிறது. ஸ்ரீலங்கா அரசின் இத்தனை தடைகள், தாக்குதல்களுக்கு மத்தியிலும் எங்கள் மண்ணின் பொருண்மியம் கடந்த ஐந்து வருடங்களில் எவ்வளவு மேம்பட்டிருக்கிறது என்பதனைக் கண்காட்சியினூடாக எவரும் அளவிடலாம்.

நாம் யார்? எங்கள் பரம்பரை என்ன? என்று ஒவ்வொருவரும் அறிந்திருப்பது போல எமது மண் என்ன? அதன் வளங்கள் யாவை என்ற விவரங்களையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். அந்த அறிவைப்பெற நல்லூர்க் கண்காட்சி சகல மட்டத்தினருக்கும் பெரிதும் உதவுகிறது.

திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலம் எங்கள் வளங்களைப் பயன்படுத்தி எமது பொருண்மியத்தை மேம்படுத்தினால், இந்த மண்ணை செல்வம் கொழிக்கும் பூமியாக்கலாம். இந்த நம்பிக்கையை ஊட்டும் வகையில் பொருண்மிய நிறுவனம் செயற்படுவதை இங்கே காண முடிகிறது.

விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, கைத்தொழில், சிறு கைத்தொழில், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான பல்துறை வளங்களும், மனித வளமும் தமிழீழப் பூமியில் நிறைய உண்டு. இதனை மக்கள் மனதில் பதிய வைக்கும் பெருமுயற்சி இது.

21 ஆம் நூற்றாண்டிற்கு உலகின் ஏனைய நாடுகள் தம்மைத் தயார் செய்யும் வேளையில் நாம் மட்டும் வாளாவிருப்பதா? வெறும் நுகரும் தேசமாக மட்டுமன்றி ஏற்றுமதி செய்யும் தேசமாகவும் மாறினாலேயே ஏனைய நாடுகளுக்கு நாம் ஈடுகொடுத்து முன்னேற முடியும்.

நல்லூர்க் கண்காட்சியைப் பார்த்தால் அந்த உள்ளுணர்வு எவருக்கும் நிச்சயம் பிறக்கும்.

## அஞ்சல் அதிகாரி ஓய்வு

யாழ்ப்பாணம், ஓக. 21

வடமாகாண பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. சடாட்சரநாதன் இன்று 21ஆம் திகதி ஓய்வு பெறுகின்றார்.

இவர் யாழ். அஞ்சல் அத்தியட்சகர், வட மாகாண தபால் அத்தியட்சகர், வடமாகாண சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. [க-4]

## ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு- கிழக்கு மாகாண பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றலுக்கான விண்ணப்பங்களை வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது.

விண்ணப்பங்களை செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பிரிவுக் கோட்டக் கல்வி அலுவலகம் ஊடாக அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (க-117-30)

## பாதிப்பு விவரப் பதிவு

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். குடா நாட்டின் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளான கடற்றொழிலாளர்கள் பற்றிய பாதிப்பு விவரங்கள் யாவும் தற்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் சித்தன்கேணி — ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் பரிசோதகர் பிரிவு தொழிலாளர்கள் சித்தன்கேணி பரிசோதகர் பிரிவு செயலகத்திலும்—

சண்டிலிப்பாய் கடற்றொழிலாளர் பரிசோதகர் பிரிவு தொழிலாளர்கள் தற்போது தற்காலிகமாக இயங்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் (ஆனைக்கோட்டை)

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்திப் பகுதியினர் தெரிவிக்கின்றனர். [ஓ]

## மிரட்டப்படும் தமிழர்

களுத்துறை பிரதான பஸ் நிலையத்திற்கு வரும் தமிழர்களை, அங்கு காத்திருக்கும் சிங்கள இளைஞர்கள் மிரட்டி தேவையற்ற விசாரணைகளை நடத்தி வருவதாக 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது. (எ)

## குப்பி விளக்கு தீயினால் குழந்தை பலி

யாழ்ப்பாணம், ஓக. 21

நித்திரையில் இருந்த குழந்தை மீது குப்பி விளக்கு தட்டுப்பட்டு விழுந்து, தீப்பிடித்ததால் அக்குழந்தை உயிரிழந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருள்ஞானம் ரமேஷ் என்ற இரண்டு வயதுக் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் தீக்காயங்களுக்குள்ளான இக்குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்தது.

# திருமலையில் 6 கிராமங்கள் விடுதலைப் புலிகள் வசம்

## அரச தரப்பு செய்தி

யாழ்ப்பாணம் ஓக. 21

திருகோணமலை மூதூரில் வெருகல் பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்த 6 கிராமங்கள் விடுதலைப்புலிகள் வசம் வந்துள்ளன என்று இலங்கை அரச தரப்பு அறிவித்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சிய படையினர் இப்பகுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர். இதனையடுத்தே இக்கிராமங்கள் புலிகள் வசமாகின.

ஈச்சிலம்பத்தை இலங்கைத்துறை முகத்துவாரம், வெருகல் முகத்துவாரம், பழத்தோட்டம், முட்டுச்சேனை, மாவடிச்சேனை ஆகிய 6 கிராமங்களுமே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

## இடம் பெயர்ந்தோருக்கு வீடமைக்கும் திட்டத்துக்கு பல நிறுவனங்கள் உதவும்

யாழ்ப்பாணம், ஓக. 21

இடம்பெயர்ந்த ஆயிரம்குடும்பங்கள் குடியேற வசதியாக வரணியில் அமைக்கப்படவிருக்கும் ஆயிரம் வீடுகள் திட்டத்துக்கு சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பல உதவ இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிய வருகின்றது.

இத் திட்டம் சம்பந்தமான விவரங்கள் கொழும்பில் உள்ள சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் இணையத்திடம் யாழ். அரச அதிபரால் சமர்ப்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தை ஆராய்ந்த இணையம் இத் திட்டத்துக்கு உதவ கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை —

இத் திட்டத்துக்கான நிதி எதையும் அரசு வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## நிதியம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 21

அண்மையில் இடம்பெற்ற "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து மீளவும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாசமலுள்ள சுமார் ஆயிரம் குடும்பங்களை, வரணி இயற்றாலையில் குடியமர்த்துவதற்குத் தேவையான நிதியின் ஒருபகுதியை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக ஆரம்பிக்கப்படவுள்ள நிதியம் இன்று 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்திலுள்ள பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்படும். (எ)

## படை உயர்மட்டத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குப் பொறுப்பான தளபதியாகச் செயற்பட்ட மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்தவுக்கும் இடையில் கருத்து மோதல்களை உருவாக்கியுள்ளன.

இராணுவ தளபதியின் விருப்பத்துக்கு மாறாகவே றோஹான் தளுவத்த "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையை ஆரம்பித்தார் என்று படை வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இராணுவ உயர் மட்டத்தில் நிலவும் இந்தக் கருத்து மோதல் காரணமாக—

குடாநாட்டின் மீது பாரிய நடவடிக்கை எதையும் மேற்கொள்வதைத் தவிர்த்து—

படையினருக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்வது குறித்து இப்போது உயர் மட்டத்தில் தீவிரமாக பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. [உ-3]

## நல்லூர் பாத யாத்திரை

யாழ்ப்பாணம், ஓக. 21

சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜத்தினர் வருடாந்தம் நடத்தும் நயினை — நல்லூர் பஜனை பாதயாத்திரை நாளை அதிகாலை அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகிறது.

சங்கரத்தை, சீரணி, மானிப்பாய், கதுமலை, தாவடி, கொக்குவில், வண்ணார் பண்ணை, கந்தர்மடம் ஊடாக பல ஆலயங்களைத் தரிசித்த பின்னர் பாத யாத்திரைக் கோஷ்டியினர் வியாழக்கிழமை தேர்த்திருவிழா வன்று நல்லூரை வந்தடைவர். (அ)

## தப்பிய மற்றொருவர் நேற்றுக் கைது

சென்னை, ஓக. 21

வேலூரில் சிறையில் இருந்து தப்பியவர்களில் ஒருவர் நேற்று புதுக்கோட்டையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டதாக தமிழக பொலீஸார் தெரிவித்தனர். [உ-3]

## மருந்துகளுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருள்களும் இக் கப்பலில் எடுத்து வரப் படவிருக்கின்றன.

இக் கப்பல் திரும்பிச் செல்லும் போது, தற்போது நடைபெறும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் விடைத்தாள்களையும் எடுத்துச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்புடன் வடபகுதிக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வருவதற்கான கப்பல் சேவைகளை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ள அதேசமயம்—

ஏனைய மனிதாபிமானப் பணிகளுக்கான செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் சேவை தடங்கலின்றி நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

நோயாளரை ஏற்றி இறக்குதல், மருந்துப் பொருள்களை ஏற்றி வருதல் போன்ற மனிதாபிமானப் பணிகளுக்காகவே "ஹபரண" கப்பலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வாடகைக்கு அமர்த்தியிருப்பது தெரிந்ததே. [உ-3]

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### நின்கையில் இல்லையோ சொல்?

மாறாத நோயென்று வைத்தியர்கள் கைவிட்டு
வாடியே வந்த வர்க்கும்;
ஆறாத கவலையால் ஆறுதலைத் தேடி
அலைந்துமே வந்த வர்க்கும்;
கூரான வேல்கொண்டு வள்ளிகுஞ் சரியுடன்
குலவுமயி லேறி யருள்வாய்
பாராண்ட தமிழ்மக்கள் பலவகதி முகாங்களில்
படுந்துயர் நீ காணவில்லையோ?

பால்மணம் மாறாத பச்சிளம் பாலகர்
பாரில் மடிவதுநீ அறியவில்லையோ?
மால்கொண்டு வள்ளியை வலப்பாகம் வைத்தவா
வளர்நல்லைப் பதிக் கரசே
நேராக நின்றெதிர் சூரரை யழித்தவேல்
நின்கையி லில்லையோ சொல்?
பாராண்ட தமிழினம் மீண்டும்பா ராளவே
பச்சைமயில் ஏறி வாராய்!

— வண்ணையூர் க. ந, கங்கைவேணியன்

### காத்தல் நின் பொறுப்பே!

இராகம்: ரஞ்சனி — தாளம் ஆதி

பல்லவி

மயில் மீது வரவேணும் முருகா சக்தியாம்
அயில்வேல் துணைகொண்டு துயர்தீர நீரும்
மயில்மீது

அநுபல்லவி

பொன்னான உயிர்போக முன்பே புவியில்
உன்னாணை என்றும் நிலைநிற்க உதவு
மயில்மீது

சரணம்

தமிழ் மக்கள் வாழ்வு தவிடு பொடியாவதா
தமிழ்க் கடவுளாம் முருகா நீ நல்லை வாழ்வே!
அமிழ்தினு மினியாய்! அம்பலத்தரசன்சேயே!
நிமிடமும் தரியாது வந்துகாத்தல் நின்பொறுப்பே
மயில் மீது

— வித்துவான் வ. செல்லையா.

தமிழீழ கைத்தொழில், விவசாய மேம்பாடுகளை-
நல்லூர் பொருண்மிய கண்காட்சியில் பாருங்கள்

# ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக மன்னிப்புச்சபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 21

சர்வதேச மன்னிப்புச்சபை ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளதாக ''புலிகளின்குரல்'' வானொலி அறிவித்தது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரச படைகள் மேற்கொண்டு வரும் கைதுகள், சித்திரவதைகள், கற்பழிப்பு மற்றும் நீதி விசாரணையின்றிய மரணதண்டனைகள், படுகொலைகள் என்பவற்றை இந்த அமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்வறிக்கை குறித்து அரசு உயர்மட்டம் ஆராய்ந்து வருவதாகவும் ''புலிகளின்குரல்'' தெரிவித்தது. (உ-3)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஓக. 21

வலிகாமம் மேற்கில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான 2 ஆம் லெப்டினன்ட் இசைஅமுதன் அல்லது இசைமாறன் (இந்திரராசா தமிழ்ச்செல்வன் — திருகோணமலை) வீரமரணமடைந்தார். (உ-3)

# இடம்பெயர்ந்தோருக்கான பிறநாட்டு உதவிகளைக் கொண்டுவரவும் தடை

யாழ்ப்பாணம், ஓக. 21

அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையாலும், பொருளாதாரத் தடையாலும் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து இன்னற்படும் மக்களுக்கென —

வெளிநாடுகளில் உள்ள தமிழர் அமைப்புகள் தொண்டர் நிறுவனங்கள் ஊடாக வழங்குவதற்கென அனுப்பிய பொருள்களை —

யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது.

கடந்த மாதம் அரசாங்கப் படைகள் நடத்திய ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட வலி மேற்கு, வலி வடக்கு மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கென வெளிநாடுகளில் உள்ள தமிழர் அமைப்புகள் பலவும் அன்பளிப்புகளை அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் தொண்டர் நிறுவனம் ஒன்றுக்கும், கொழும்பில் தலைமை அலுவலகங்களைக் கொண்டியங்கும் இரண்டு தொண்டர் நிறுவனங்களுக்கும் இந்த வகையில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கிடைத்துள்ளன.

ஆனால் அவற்றைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு அரசாங்கம் அனுமதி மறுப்பதாக சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவன வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (அ-3)

## எத்தனை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போக்கி ஐக்கியமான நாட்டைக் கட்டி எழுப்புவதே அரசின் நோக்கம்.

*புதிய மாகாணசபை*

இதற்காக புதிய மாகாணசபை அமைப்பு முறை ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது.

தமிழர்கள் உட்பட சகல சிறுபான்மை மக்களினதும் நியாயபூர்வமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படும்.

நெருக்கடிக்கு தீர்வு காண உருப்படியான ஆலோசனைகளை தற்போதைய அரசாங்கம் மட்டுமே முன் வைத்துள்ளது.

இந்த யோசனைகள் கூட அறுதியான சட்டங்கள் அல்ல; இவை வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

பல தரப்பட்ட கருத்துக்கள் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஜனநாயகத்தில் பற்று வைத்துள்ள தற்போதைய அரச கைக்கொள்ளும் நடைமுறையின் சிறப்பு அம்சம் இதுவாகும்.

*கருத்தை திணிக்கமாட்டோம்*

முன்னைய அரசாங்கத்தை போல நாம் எமது கருத்துக்களை மக்கள் மீது திணிக்க மாட்டோம்.

1987 ஆம் ஆண்டில் இந்திய இலங்கை ஒப்பந்தம் முன்னைய அரசாங்கத்தினால் மக்கள் மீது திணிக்கப்பட்டது.

ஜனாதிபதி என்ற வகையில் எனக்கு பூரண நிறைவேற்று அதிகாரம் இருந்த போதிலும் அவ்வாறு ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையை எடுக்க மாட்டேன்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நாம் வெளியிட்ட போது பலர் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டனர்.

'தமிழர் பிரச்சினை என்று எதுவுமே கிடையாது. ஆகவே அதற்கு தீர்வு' தேவையில்லை, —என்று சிலர் வாதிட்டனர்.

அப்படியானால் வட பகுதி இளைஞர்கள் பலர் கழுத்தில் ''சயனைட்'' வில்லைகளைக் கட்டிக் கொண்டு எந்த நேரமும் மரணத்தை தழுவத் தயாராக இருப்பது ஏன்?

பிரபாகரன் மீது அவர்களுக்கு இருக்கும் பற்றுதல் மட்டுமா இதற்கு காரணம்?.

*வரலாற்று வாயப்பு*

நாம் அற்ப உணர்வுகளுக்கு இடம்கொடுக்காமல் பிரச்சினையை புத்தி பூர்வமாக ஆராய்ந்து அணுகவேண்டும்.

நீண்ட காலமாக நிலவி வரும் பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய வரலாற்று வாய்ப்பு நெருங்கி வந்துள்ளது. இந்தவாய்ப்பைநழுவ விட்டால் மற்றுமொரு வாய்ப்பு பல் நூற்றாண்டு காலத்துக்கு ஏற்படாது போகவும் கூடும்.

அரசியல் பரவலாக்கல் நாடு துண்டாடப்படுவதிற்கில்லை. பிளவுபட்டுள்ள நாட்டை ஒருங்கிணைப்பதற்காகவேயாகும் — என்றார். [உ-3]

## அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கருத்துக் கணிப்பின் படி எட்டு வீதமான மக்களே தீர்வுத் திட்டத்தை ஆதரித்திருக்கின்றார்கள்.

47 வீதமானோர் ஓரளவு ஆதரவை வெளியிட்டுள்ளனர்; குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு மட்டும் ஆதரவு கிடைத்திருந்திருக்கின்றது.

இலங்கையை ''பிராந்திய சபைகளின் ஒன்றியம்'' என மாற்றும் யோசனையை 75 வீதத்தினர் எதிர்த்துள்ளனர்.

காணி தொடர்பாக பிராந்திய சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படுவதை 64 வீதத்தினர் எதிர்த்துள்ளனர்.

பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கவேண்டும் என 78 வீதமானோர் விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

*''த சண்டே ஐலண்ட்''*

தீர்வு யோசனைகளுக்கு எதிரும் புதிருமாக ஆதரவு என செய்தி வெளியிட்டிருக்கும் ''த சண்டே ஐலண்ட்'' பத்திரிகை அரசின் தீர்வு யோசனைகளை வன்மையாகக் கண்டித்திருக்கின்றது. தீர்வு யோசனைகளுக்கு எதிராக பிக்குமார் வெளியிட்டுள்ள கண்டனங்களையும் அது முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்துள்ளது.

அதன் ஆசிரிய தலையங்கத்திலும் தீர்வுத் திட்டத்துக்கு வன்மையாக கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தீர்வுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு ''த சண்டே ஐலண்ட்'' மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து தயாரிக்கப்பட்ட இத்தீர்வுத் திட்டம் சிங்கள மக்களுக்கு ஏற்புடையதல்ல என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாட்டின் இறைமையும் ஐக்கியமும் பேணப்பட வேண்டுமானால் பிராந்திய சபைகளின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

*''சண்டே ஒப்சேவர்''*

அரசு சார்பு வார இதழான ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகை மட்டும் அரசின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்கு ஐம்பதுக்கும் அதிக வீத மக்களின் ஆதரவு கிடைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றது.

அரசின் அதிகாரப் பரவலாக்கல் திட்ட யோசனைகள் தொடர்பாக இதுவரை மௌனம் சாதித்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் கூட இப்போது எதிர்ப்புக் காட்டத் தொடங்கியுள்ளதாக ''த சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவித்தது.

இத்தகைய எதிர்ப்புக் காரணமாக தனது தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு அரசு பல திருத்தங்களைக் கொண்டு வரக்கூடும் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. [உ-3]

## வெண்தாமரை திட்டத்தின் நோக்கம்

யுத்தத்திற்கு அனைவரையும் ஒன்றிணைப்பதே வெண்தாமரைத் திட்டத்தின் நோக்கமாகும்.

வெண்தாமரை இயக்க அமைப்பாளர் அமைச்சர் மங்கள சமரவீர பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். [க-எ]

## நிரந்தர நியமனம்

பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட தகுதியான சகல றிசேர்வ் பொலீஸாரும், நிரந்தர பொலீஸாராக நியமிக்கப்படவுள்ளனர்.

ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய இவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படும்.

தற்சமயம் நாட்டில் சுமார் 10 ஆயிரம் றிசேர்வ் பொலீஸார் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களுள் சிலர் 20 ஆண்டுகள் வரை கூட பணியாற்றி உள்ளனர்.

வடக்கு — கிழக்கில் பணியாற்றியவர்களுக்கும், தற்போது பணியாற்றுவோருக்கும் இதில் முன்னுரிமை அளிக்கப்படும். [எ]

## தீர்வுத் திட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் அமைச்சருமான ரதன சிறி விக்கிரமநாயக்கா ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

யோசனைகளில் அகற்றப்பட வேண்டிய மற்றும் திருத்தப்பட வேண்டிய அம்சங்களை அவர் இக்கடிதத்தில் விலாவாரியாக குறிப்பிட்டிருக்கின்றார்.

அவரின் வற்புறுத்தலை அல்லது சிபாரிசுகளை அரசு ஏற்குமானால் அது அரசின் யோசனைகளின் அத்திவாரத்தையே ஆட்டம் காணச் செய்துவிடும் என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் அத்தகைய சிபாரிசுகளை அரசு ஏற்று திருத்தங்களைச் செய்யுமானால் அந்த யோசனைகளே தமிழ்க் கட்சிகளால் ஏற்க முடியாதவைகளாகிவிடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தீர்வுயோசனைகளை பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. எதிர்க்கின்றதோ இல்லையோ —

ஆனால் ஆளும்கட்சிக்குள் அந்த யோசனைகளுக்கு எதிர்ப்பு வலுத்துவருவதாக பி.பி.ஸி. குறிப்பிட்டது.

## புலிகளுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று வெளிவந்த 'சண்டே ஒப்சேவர்' ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கம் சமாதானத் தீர்வு ஆலோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விவாதிப்பதற்கு முன் புலிகள் அடையாள ரீதியிலாவது ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


## உதயன் வெளியீட்டகத்தின்

ஆதரவில்

யாழ். மிட் - ரவுண் றோட்டரக்ற் கழகம்

நடத்தும்

## "கோலப் போட்டி"

போட்டிகள் பாடசாலை, தனியார் என இரு பிரிவுகளாக நடத்தப்படும்

விண்ணப்ப முடிவு திகதி;- 30 08-1995

விண்ணப்ப படிவங்கள் கிடைக்குமிடங்கள்

- ★ யாழ். மிட் -ரவுண் றோட்டரக்ற் கழகம்
- ✶ போஸ்கோ புத்தகசாலை
- ✶ பூபாலசிங்கம் பொத்தகசாலை
- ✶ சவாரிஸ் (சுண்டிக்குளி)
- ✶ ஸ்ரீ காந்தா புத்தகசாலை (நல்லூர்)

(சி/2085)


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை செல்வரத்தினம்

காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்வரத்தினம் (V. செல்வரத்தினம் அன்கோ 35, சென். ஜொன்ஸ் வீதி, கொழும்பு-11) 19-08-1995 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, அன்னபூரணம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஆறுமுகம், சுந்தரம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், அன்னம்மா, கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரவணபவன், மகேஸ்வரி, சண்முகபவன், யோகேஸ்வரி, இராசேஸ்வரி [யாழ். பல்கலைக் கழகம்) ஆறுமுகபவன், ஆனந்தபவன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கணேசலிங்கம், சிவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமாறன், அபிராமி, லோகஜிரிஜா ஆகியோரின் அன்புப் பேரனும், தசேரமணி, தர்மலிங்கம், தங்கேஸ்வரி, தங்கரத்தினம், தம்பிஐயா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
செ. ஆனந்தபவன்,
(மகன்)

168/6 பிக்கிறீன்க் வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13.

[38136]

## திருமதி சந்திரகாந்தம் நடராசா

தெல்லிப்பழை குருநாத சுவாமி கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சந்திரகாந்தம் நடராசா நேற்றுக் காலமானார்.

இவர் சினியர் நடராசாவின் அன்பு மனைவியும், பழனிவேல் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சக்திவேல், குமாரவேல் [N. E. M. O], கலைவாணி [ஆசிரியை யூனியன் கல்லூரி- தெல்லிப்பழை) ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இடுக்கித் தோட்டம், கந்தசுவாமி கோவிலடி, கைதடியில் நாளை [22 - 08 - 1995] காலை 10-00 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. பழனிவேல்

பசுங்கரத்தினம்,
கைதடி மேற்கு,
கைதடி.

[38139]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.